# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஏழாம் பத்து

## இரண்டாம் திருவாய்மொழி - கங்குலும் பகலும்
## பராங்குச நாயகி பெரிய பெருமாளிடத்து மோஹித்திருக்க, ‘இந்நாயகி விஷயமாக என் செய்ய நீர் எண்ணுகின்றீர்?’ என்று திருத்தாயார் கேட்கும் பாசுரம்

** கங்குலும் பகலும் கண் துயில் அறியாள் *
கண்ண நீர் கைகளால் இறைக்கும் *
சங்கு சக்கரங்கள் என்று கை கூப்பும் *
தாமரைக் கண் என்றே தளரும் **
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டு? என்னும் *
இரு நிலம் கை துழா இருக்கும் *
செங்கயல் பாய் நீர்த் திருவரங்கத்தாய்! *
இவள் திறத்து என் செய்கின்றாயே? 1

என் செய்கின்றாய்? என் தாமரைக் கண்ணா!
என்னும் * கண் நீர் மல்க இருக்கும் *
என் செய்கேன்? எறி நீர்த் திருவரங்கத்தாய்!
என்னும் * வெவ்வுயிர்த்து உயிர்த்து உருகும் **
முன் செய்த வினையே! முகப்படாய் என்னும் *
முகில் வண்ணா! தகுவதோ? என்னும் *
முன் செய்து இவ்வுலகம் உண்டு உமிழ்ந்து அளந்தாய்! *
என் கொலோ முடிகின்றது இவட்கே? 2

வட்கிலள் இறையும் மணி வண்ணா! என்னும் *
வானமே நோக்கும் மையாக்கும் *
உட்குடை அசுரர் உயிர் எல்லாம் உண்ட *
ஒருவனே! என்னும் உள் உருகும் **
கட்கிலீ! உன்னைக் காணும் ஆறு அருளாய் *
காகுத்தா! கண்ணனே! என்னும் *
திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்! *
இவள் திறத்து என் செய்திட்டாயே? 3

இட்ட கால் இட்ட கையளாய் இருக்கும் *
எழுந்து உலா மயங்கும் கை கூப்பும் *
கட்டமே காதல் என்று மூர்ச்சிக்கும் *
கடல் வண்ணா! கடியை காண் என்னும் **
வட்ட வாய் நேமி வலங்கையா! என்னும் *
வந்திடாய் என்றென்றே மயங்கும் *
சிட்டனே! செழு நீர்த் திருவரங்கத்தாய்! *
இவள் திறத்து என் சிந்தித்தாயே? 4

சிந்திக்கும் திசைக்கும் தேறும் கை கூப்பும் *
திருவரங்கத்து உள்ளாய்! என்னும்
வந்திக்கும் * ஆங்கே மழைக் கண் நீர் மல்க *
வந்திடாய் என்றென்றே மயங்கும் **
அந்திப் போது அவுணன் உடல் இடந்தானே!
அலை கடல் கடைந்த ஆரமுதே *
சந்தித்து உன் சரணம் சார்வதே வலித்த *
தையலை மையல் செய்தானே! 5

மையல் செய்து என்னை மனம் கவர்ந்தானே!
என்னும் * மா மாயனே! என்னும் *
செய்ய வாய் மணியே! என்னும் * தண் புனல் சூழ்
திருவரங்கத்து உள்ளாய்! என்னும் **
வெய்ய வாள் தண்டு சங்கு சக்கரம் வில் ஏந்தும் *
விண்ணோர் முதல்! என்னும் *
பை கொள் பாம்பணையாய்! இவள் திறத்து அருளாய் *
பாவியேன் செயற் பாலதுவே 6

பால துன்பங்கள் இன்பங்கள் படைத்தாய்! *
பற்றிலார் பற்ற நின்றானே! *
கால சக்கரத்தாய்! கடல் இடம் கொண்ட *
கடல் வண்ணா! கண்ணனே! என்னும் **
சேல் கொள் தண் புனல் சூழ் திருவரங்கத்தாய்!
என்னும் * என் தீர்த்தனே! என்னும் *
கோல மா மழைக் கண் பனி மல்க இருக்கும் *
என்னுடைக் கோமளக் கொழுந்தே 7

கொழுந்து வானவர்கட்கு! என்னும் * குன்றேந்திக்
கோ நிரை காத்தவன்! என்னும் *
அழும் தொழும் ஆவி அனல வெவ்வுயிர்க்கும் *
அஞ்சன வண்ணனே! என்னும் **
எழுந்து மேல் நோக்கி இமைப்பிலள் இருக்கும் *
எங்ஙனே நோக்குகேன்? என்னும் *
செழும் தடம் புனல் சூழ் திருவரங்கத்தாய்! *
என் செய்கேன் என் திருமகட்கே? 8

** என் திரு மகள் சேர் மார்வனே! என்னும்
என்னுடை ஆவியே! என்னும் *
நின் திரு எயிற்றால் இடந்து நீ கொண்ட *
நில மகள் கேள்வனே! என்னும் **
அன்று உருமேழும் தழுவி நீ கொண்ட *
ஆய் மகள் அன்பனே! என்னும் *
தென் திருவரங்கம் கோயில் கொண்டானே! *
தெளிகிலேன் முடிவு இவள் தனக்கே 9

முடிவு இவள் தனக்கு ஒன்று அறிகிலேன் என்னும் *
மூவுலகு ஆளியே! என்னும் *
கடி கமழ் கொன்றைச் சடையனே! என்னும் *
நான்முகக் கடவுளே! என்னும் **
வடிவுடை வானோர் தலைவனே! என்னும் *
வண் திருவரங்கனே! என்னும் *
அடி அடையாதாள் போல் இவள் அணுகி
அடைந்தனள் * முகில் வண்ணன் அடியே 10

** முகில் வண்ணன் அடியை அடைந்து அருள் சூடி
உய்ந்தவன் * மொய் புனல் பொருநல் *
துகில் வண்ணத் தூ நீர்ச் சேர்ப்பன் * வண் பொழில் சூழ்
வண் குருகூர்ச் சடகோபன் **
முகில் வண்ணன் அடி மேல் சொன்ன சொல் மாலை *
ஆயிரத்து இப்பத்தும் வல்லார் *
முகில் வண்ண வானத்து இமையவர் சூழ
இருப்பர் * பேர் இன்ப வெள்ளத்தே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---